சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 54/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | இனிகோ திவ்யன் |
| தந்தை பெயர் | : | அல்போன்ஸ் |
| கிராமம் | : | கடையம் |
| தாலுக்கா | : | தென்காசி |
| தொழில் | : | காவல் துணை ஆணையர் |
| வயது | : | 39 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்பொழுது மதுரை மாநகரத்தில் தெற்கு பகுதிக்கு காவல் துணை ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு

திருவாரூர் மாவட்டத்தில், முத்துப்பேட்டை உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்தபோது கூடுதலாக திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் சரக பொறுப்பு அதிகாரியாக பணிபுரிந்தபோது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் அப்போதைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்த அ.சா-7 பாலசுப்பிரமணியன் என்பவர் கடந்த 02.08.2019 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா-7 ஆனவர் திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண். 357/2019 -ல் இதச பிரிவுகள் 448, 294(பி) , 323, 506(2) உ/இ 3(1)(r), 3(2)(va) SC/ST (PoA) Act கீழ் பதிவு செய்து வைத்திருந்த அ.சா.ஆ-6 ஆன முதல் தகவல் அறிக்கையில் கீழான வழக்கை, திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் இந்த வழக்கை திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்புல் இருந்த காரணத்தினால் என்னை புலன் விசாரணை செய்ய வேண்டுமென காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக நடவடிக்கை C.No.81/SJ&HR/TVR/2019, dated, 02.08.2019- கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் 03.08.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் அ.சா-3 முத்து மற்றும் அ.சா-4 மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் உடனிருந்த சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 8** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் புகார் அளித்திருந்த அ.சா-1 அமுதா என்பவரையும் கண்ணுற்ற சாட்சியான அ.சா-2 மனோகர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் தனி தனியாக பதிவு செய்தேன்.

3. பின்னர் திருத்துறைப்பூண்டிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் திரு. பழனிசாமி என்பவர் புதிதாக பதவி ஏற்றுக்கொண்ட காரணத்தினால்

அவரை இந்த வழக்கை தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலக செயல் நடவடிக்கை C.No.81/SJ&HR/TVR/2019, dated, 05.08.2019- கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதனால் வழக்கு ஆவணங்களை மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் பழனிசாமி என்வரிடம் ஒப்படைத்துவிட்டேன். எனது விசாரணையில் அ.சா-1 அமுதா என்பவர் வாக்குமூலம் அளிக்கும்போது எதிரிகள் மூவரும் குற்றம் இழைத்துள்ளதாக கூறியுள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அ.சா.ஆ-6 ஆன முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண் 15-ல் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்படவில்லை. அ.சா-1 நிலையம் ஆஜராகி கொடுத்ததாக சொல்லும் புகாரில் சம்பவ சமயத்தில் வேறு யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். காவல் நிலைய ஆணை எண் 568(2)-ன் படி வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நான் பதிவு செய்துள்ள சாட்சிய வாக்குமூலங்களை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேனா என்றால் அனுப்பி வைத்துள்ளேன். நான் அ.சா-2 மனோகரன் என்பவரை விசாரணை செய்தபோது எதிரிகளில் 2ம் எதிரி சூரியா மற்றும்3 ம் எதிரி சீனு ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்று கூறவில்லை என்றுசொன்னால் சரிதான். ஆக அ.சா-2 என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தின் படி சம்பவ இடத்தில் இல்லாத நபர்களை சம்பவ சமயத்தில் இருந்ததாக பொய்யாக கூறியுள்ளார் என்று சொன்னால் நான் இவ்வழக்கில் முழுமையாக விசாரணை மேற்கொள்ளாத காரணத்தினால் என்னால் இது பற்றி கூற இயலாது. நான் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல் பர்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் நான் சம்பவ இடத்திற்கு சென்று தயார்

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கினை சரிவர விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.30 13:55:08 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.